




admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI www.dhinakani.com


காலை நாளிதழ்








| Vol: 02 | Issue: 357 | 4 Pages | 23.7.2025 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 357 | 4 பக்கங்கள் | 23.7.2025 | புதன்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |

**பற்றி விடாஅ இடும்பைகள் பற்றினைப்**

**பற்றி விடாஅ தவர்க்கு**

**விளக்கம்:**

**யான் எனது என்னும் இருவகைப் பற்றுக்களையும்பற்றிக்கொண்டுவிடாத வரை, துன்பங்களும் விடாமல் பற்றிக்கொள்கின்றன.**

# உங்களுடன் ஸ்டாலின் மருத்துவமனையில் இருந்தபடி முதல்அமைச்சர் ஆலோசனை

சென்னை, ஜூலை 23

அப்போலோ மருத்துவமனையில் இருந்தபடியே 'உங்களுடன் ஸ்டாலின்' திட்டப் பணிகள் குறித்து தலைமைச் செயலாளருடன் முதல்அமைச்சர்மு.க.ஸ்டாலின் ஆலோசனை நடத்தினார்.

இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாடு முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின், சென்னைஅப்பலோமருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அங்கு அவர் மூன்று நாட்கள் ஓய்வு மற்றும் மருத்துவக் கண்காணிப்பில் இருந்து வருகிறார்.

இந்நிலையில் மருத்துவமனையில் இருந்தபடியே அவர் அலுவலகப் பணிகளை மேற்கொள்ளலாம் என்று மருத்துவர்கள் தெரிவித்ததன் அடிப்படையில் இன்று (22.7.2025) அவர் அரசு தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், இ.ஆ.ப., அவர்களுடன்அரசுப் பணிகள் குறித்து ஆலோசனை மேற்கொண்டார்.

கடந்த 15.7.2025 தமிழ்நாட்டில் தொடங்கப்பட்டு சிறப்பாக நடைபெற்றுவரும்"உங்களுடன்ஸ்டாலின்" திட்டத்தின் பணிகளின் முன்னேற்றம் குறித்து தமிழ்நாடு முதல்அமைச்சர் கேட்டு அறிந்தார்.

நேற்றைய தேதி வரை இத்திட்டத்தின்கீழ் மொத்தம் 5,74,614 மனுக்கள் வரப்பெற்றுள்ளன. இதில் எத்தனை மனுக்களுக்கு தீர்வுகள் காணப்பட்டுள்ளன, பெறப்பட்ட மனுக்கள் அனைத்தும் உரிய துறைகள் மூலம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றனவா போன்ற விவரங்களை கேட்டறிந்த முதல்அமைச்சர் அவர்கள், தொடர்ந்து இந்த முகாம்கள் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி நடத்தப்பட வேண்டும் என்றும், முகாம்களுக்கு மனுக்களை அளிக்க வரும் மக்களுக்குத் தேவையான வசதிகளை செய்து கொடுத்தல் குறித்தும் அறிவுரைவழங்கினார்.

மேலும், பெறப்படும் மனுக்களின் மீது குறிப்பிட்ட காலத்திற்குள் எவ்வித தொய்வுமின்றி நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்றும் முதல்அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர்; எதிர்க்கட்சி எம்.பி.க்கள் ஆர்ப்பாட்டம்




புதுடெல்லி, ஜூலை 23

ராகுல் காந்தியை அவையில் பேச அனுமதிக்க வேண்டும் என வலியுறுத்தி காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகளின் எம்.பி.க்கள் நாடாளுமன்ற வளாகத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் பரபரப்பான அரசியல் சூழ்நிலையில்நேற்று தொடங்கியது. எதிர்க்கட்சியினரின்பல்வேறு அமளிக்கு இடையே இரு அவைகளும் நேற்று பலமுறை ஒத்தி வைக்கப்பட்டன. இந்த சூழலில், துணை ஜனாதிபதி ஜெகதீப் தன்கர் தனது பதவியை ராஜினாமா செய்கிறேன் என அறிவித்தது அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியது.

இதனை தொடர்ந்து, மாநிலங்களவை துணை தலைவர் ஹரிவன்ஷ் அவையை நடத்தி வருகிறார். இந்நிலையில், இரண்டாவது நாளான இன்று இரு அவைகளும் கூடியபோது, எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டனர்.

இதன்படி, மக்களவையின் எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி, சமாஜ்வாதி கட்சியின் தலைவர் அகிலேஷ் யாதவ், தமிழக எம்.பி.க்களான ஆ. ராசா, கனிமொழி, டி.ஆர். பாலு, ஜோதிமணி உள்ளிட்ட எதிர்க்கட்சிகளை சேர்ந்த எம்.பி.க்கள் நாடாளுமன்றத்தின் மகர் துவார் பகுதியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அதற்கு முன் அவை கூடியபோது, இரு அவைகளிலும் பீகாரில் சிறப்பு தீவிர மதிப்பாய்வு (எஸ்.ஐ.ஆர்.) விவகாரம் பற்றி எதிர்க்கட்சிகள் கோஷம் எழுப்பின.

இந்த எஸ்.ஐ.ஆர். விவகாரத்தின்படி, பீகாரில் வாக்காளர் பட்டியலில் மறுஆய்வு மேற்கொள்ள வேண்டும் என எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன. ஒரு வெளிப்படையான, சுதந்திர மற்றும் சிறந்த முறையிலான தேர்தல் நடைமுறையை உறுதி செய்வதில் இந்த பட்டியல் முக்கியத்துவம் பெறுகிறது.

இதன்படி, குடிமக்கள்அல்லாதோர்பட்டியலில் இருந்து நீக்கப்படுவார்கள். 18 வயதுக்கு மேற்பட்ட அனைத்து இந்திய குடிமக்களும், பிரிவு 19ன்படி பட்டியலில் சேர்க்க அனுமதிக்கப்படுவர். இந்த எஸ்.ஐ.ஆர். விவகாரம் பற்றி அவையில் பேச அனுமதிக்க வேண்டும் என வலியுறுத்தியும், ராகுல் காந்தியை அவையில் பேச அனுமதிக்க வேண்டும் என்று வலியுறுத்தியும் நாடாளுமன்ற வளாகத்தில் எம்.பி.க்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# ஜெகதீப் தன்கர் ராஜினாமா: மத்திய மந்திரிகள் அவசர ஆலோசனை



புதுடெல்லி, ஜூலை 23

நாட்டின்துணைஜனாதிபதி ஜெகதீப்தன்கர்தனது உடல்நிலையை காரணம் காட்டி, துணை ஜனாதிபதி பதவியை நேற்று இரவு திடீரென்று ராஜினாமா செய்தார். அதற்கான கடிதத்தை ஜனாதிபதி திரவுபதி முர்முவுக்கு அனுப்பிவைத்தார்.

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் நேற்று கூடியது. முதல் நாளே மக்களவையிலும், மாநிலங்களவையிலும் எதிர்க்கட்சியினர் கடும் அமளியில் ஈடுபட்டனர். இத்தகைய பரபரப்பான சூழ்நிலையில், துணை ஜனாதிபதி ஜெகதீப் தன்கர் தனது பதவியை ராஜினாமா செய்து இருப்பது அரசியல் களத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் துணை ஜனாதிபதி ஜெகதீப் தன்கரின் திடீர் ராஜினாமா குறித்து எதிர்க்கட்சிகள் பல்வேறு சந்தேகங்களையும் கேள்விகளையும் எழுப்பியுள்ளனர். காங்கிரஸ் பொதுச்செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் கூறுகையில், துணை ஜனாதிபதி ஜெகதீப் தன்கரின் திடீர் ராஜினாமா புரிந்துகொள்ள முடியாத அதிர்ச்சியாக உள்ளது. நீதித்துறை தொடர்பான முக்கிய அறிவிப்புகளை இன்று அவர் வெளியிட இருந்தார்.உடல் நிலையில் தன்கர் கவனம் செலுத்த வேண்டும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. இருப்பினும், இந்த முடிவை அவர் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், ஜெகதீப் தன்கர் நேற்று ராஜினாமா செய்த நிலையில், மத்திய மந்திரிகள் முக்கிய ஆலோசனை நடத்தி வருகின்றனர். நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெறும் ஆலோசனையில் ராஜ்நாத் சிங், அமித்ஷா, ஜெ.பி. நட்டா, ஜெய்சங்கர், சிவராஜ் சவுகான் உள்ளிட்டோர் பங்கேற்றுள்ளனர். அடுத்த துணை ஜனாதிபதி யார்? என்று இதில் விவாதிக்கப்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. மேலும் ஜெகதீப் தன்கருக்கு பிரிவு உபசார உரை நிகழ்த்த வாய்ப்பில்லை என்றும் கூறப்படுகிறது.

துணை ஜனாதிபதி பதவியை ராஜினாமா செய்த ஜெகதீப் தன்கர் இன்றைய மாநிலங்களவை நிகழ்ச்சிகளில் பங்கேற்கவில்லை. அவருக்கு பதிலாக மாநிலங்களவைத் துணைத் தலைவர் ஹரிவன்ஷ் அவையை நடத்தினார்.

# MJMKவின் திருப்பூர் மாவட்டதுண நிலை பொறுப்பாளர்களுக்கான கலந்தாய்வு கருத்தாய்வு ஆலோசனை கூட்டம்



மக்கள் ஜனநாயக முன்னேற்றக் கழகத்தின் நிறுவனர் தலைவர் இப்ராஹீம் பாதுஷாஅவர்களின்ஒப்புதலோடும், வழிகாட்டுதலோடும், திருப்பூர் மாநகர்_மாவட்ட_கழக_செயலாளர் அபுதாஹீர் தலைமையில் திருப்பூர் மாவட்டத்தில் உள்ள வடக்கு,மற்றும் தெற்கு மாவட்டங்களுக்கான துணைநிலை பொறுப்பாளர்கள்நிர்வாகிகளுக்கானகலந்தாய்வு கூட்டம் வெற்றிகரமாக நடைபெற்றது.

இந்த கலந்தாய்வுக் கூட்டத்தில் திருப்பூர் மாநகர் மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர், மாநகர் மாவட்ட துணை அமைப்பாளர், திருப்பூர் வடக்கு மாவட்ட துணைச் செயலாளர், துணை அமைப்பாளர், துணை அமைப்புச் செயலாளர், துணை ஒருங்கிணைப்பாளர், உள்ளிட்ட நிர்வாகிகளும் திருப்பூர் தெற்கு மாவட்ட துணைத்தலைவர், துணைச் செயலாளர், துணை அமைப்பாளர், துணை அமைப்புச் செயலாளர், தெற்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு செயலாளர், மங்கலம் ஒன்றிய தலைவர், மங்கலம் ஒன்றிய செயலாளர், முதலிபாளையம் ஒன்றிய செயலாளர், தெற்கு மாவட்ட அமைப்புச் செயலா ளர் , உள்ளிட்ட பல்வேறு பொறுப்புகளுக்கான நிர்வாகிகளும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். கழகத்தின் வளர்ச்சிக்கான அடுத்த கட்ட நகர்வுகளை தெருமுனை பிரச்சாரங்களைவலிமைப்படுத்துவது,மக்களை சந்தித்து அதிகமதிகம் உறுப்பினர்களாக சேர்ப்பது உள்ளிட்ட ஆலோசனைகளும் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன

பங்கேற்ற அனைவருக்கும் திருப்பூர் மாநகர் மாவட்ட கழகத்தின் சார்பில் நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கப்பட்டது.

# கிரிசமுத்திரம் கிராமத்தில் நரபலி கொடுக்க துன்புறுத்திய மாந்திரீகவாதி மீது பெண் புகார்




திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி புதுமனைகிரிசமுத்திரம் கிராமத்தில் வசிக்கும் பராசக்தி வயது 32 இவருடைய கணவர் சுரேஷ் குறி மற்றும் மாந்திரீகம் செய்யும் தொழில் செய்து வருகிறார்.

இவர் வீட்டில் புதையல் இருப்பதாகவும் புதையலை எடுக்க மகனை நரபலி கொடுக்க வேண்டும் எனக் கூறி பராசக்தி வற்புறுத்தி வந்துள்ளார்.

பராசக்திக்கு மகள் சுஜிதா வயது 12 திருமலை வயது 14 இரு பிள்ளைகள் தனது தாய் வீட்டில் படித்து வருகின்றனர். அதே பகுதி சேர்ந்த மகாலட்சுமி கணவர் கார்த்திக் மற்றும் சுரேஷ் தாயார் மலர் ஆகிய மூவரும் சேர்ந்து பராசக்தியை கீழே தள்ளி அடித்து துன்புறுத்தி மகனை மட்டும் அழைத்து நரபலி கொடுக்க உதவுமாறு உடல்ரீதியாகதுன்புறுத்தியதால் மன வேதனை அடைந்த பராசக்தி தனது தாயாரிடம் நடந்த சம்பவத்தை கூறியுள்ளார்.

அதிப்தி அடைந்த குடும்பத்தினர் பராசக்தி அழைத்துக் கொண்டு வாணியம்பாடி கிராமிய காவல் நிலையத்தில் கணவர் சுரேஷ் மற்றும் மாமியார் மலர் உறவினர் மகாலட்சுமி கார்த்திக் ஆகியோர் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு புகார் மனு அளித்துள்ளார்.

# பரங்குன்றாபுரத்தில் புதிய ரேஷன் கடை திறப்புவிழா பழனிநாடார் எம்எல்ஏ, பொ.சிவபத்மநாதன் பங்கேற்பு



தென்காசி மாவட்டம், ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம்,பரங்குன்றாபுரத்தில் ரூபாய் 10 லட்சம் செலவில் புதிதாக கட்டி முடிக்கப்பட்ட ரேஷன் கடையை எஸ்.பழனி நாடார் எம்எல்ஏ திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில்

முன்னாள் தென்காசி தெற்கு மாவட்ட திமுக செயலாளர் வழக்கறிஞர் பொ.சிவபத்ம நாதன், ஆலங்குளம் யூனியன் சேர்மன் திவ்யா மணிகண்டன் ஆகியோர் கலந்து கொண்டனர்

தென்காசி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம் பரங்குன்றாபுரத்தில் ரூ.10 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட புதிய ரேஷன் கடை திறப்பு விழா நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு , ஆலங்குளம் யூனியன் தலைவர் திவ்யா மணிகண்டன் தலைமை வகித்தார்.முன்னாள் தென்காசி தெற்கு மாவட்ட திமுக செயலாளர் வழக்கறிஞர் பொ.சிவபத்மநா தன் முன்னிலை வகித்தார். தென்காசி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பழனி நாடார்.புதிய ரேஷன் கடையை திறந்துவைத்தார்.

அதனைத் தொடர்ந்து அதே பகுதியில் ரூபாய் .6.28 லட்சம் மதிப்பில் புதிதாக போடப் பட்ட சிமெண்ட் சாலையை சேர்மன் திவ்யா மணிகண்டன் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சிகளில் ஆலங்குளம் யூனியன் துணை சேர்மன் செல்வக்குடி ராஜாமணி, ஒன்றிய கவுன்சிலர்கள் பால் துரை, அந்தோணி, வெள்ள கால் கவுன்சிலர் தர்மராஜ். முத்தம்மாள்புரம்

ஊராட்சி மன்றத்தலைவர் முருகன். ஊராட்சி உறுப்பினர்கள்பொன்னுக்கிளி,தினேஷ்.சுரேஷ்,மாவட்ட பிரதிநிதி ஸ்டீபன் சத்யராஜ், முல்லை கண்ணன், இளைஞரணி துணை அமைப்பாளர் அசோக், அருணா பாண் டியன், கிளை செயலாளர் மனோகரன், பிரதிநிதி பரமசிவம், கருவந்தா செயலாளர் வெள்ளத்துரை,அச்சங்குன்றம்செயலாளர் மாடசாமி. ஊத்துமலைராஜா, ஆனந்த், சவுந்தர்ராஜ்,செல்வம், காங் கிரஸ் நிர்வாகிகள் சண்முகவேல் வட்டாரத் தலைவர் கணேசன், குத்தாலிங்கம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் தீமிதி திருவிழா



சென்னை இரட்டைஏரி புதிய இலட்சுமிபுரம்அருள் மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் 43ம் ஆண்டு தீமிதி திருவிழா ஆலயத் தலை வர் ஏழுமலை, செயலாளர் வெற்றிவேலன், பொருளாளர் ரமேஷ்குமார், ஆலோசகர்கள் சக்கரபாணி, இலட்சுமிபதி, பக்தவச்சலம் மற்றும் கிராம பொதுமக்கள் ஏற்பாட்டில் நடைபெற்றது. துணைத் தலைவர்கள் ரவிகுமார், சண்முகம், நடராஜன், வேலு, குமார், ஸ்ரீதரன், நாகராஜன் ஆகியோர் முன்னிலையில் பந்தக்கால்நடுதல், எல்லை கட்டுதல், கங்கை திரட்டுதல், காப்புகட்டுதல், தாய்வீட்டு சீதனம் கொண்டு வருதல், அக்னிகுண்டம் திறத்தல், அலகு பானை எடுத்தல், பதிஅலங்கார வர்ணனை, மாடவீதி உலா, அம்மனுக்கு

சந்தனகாப்பு அபிஷேக அலங்காரம், அம்மன் கரகம் வீதிஉலா, உச்சிகால பூஜை, கூழ்வார்த்தல் போன்ற பல்வேறு சிறப்பு பூஜைகளும் நடைபெற்றன.பின்னர் சுமார் 300க்கும் மேற்பட்ட காப்புகட்டியபக்தர்கள்தீகுண்டத்தில் இறங்கி தங்களின் நேர்த்திகடனை பூர்த்தி செய்தனர். இதனைத்தொடர்ந்து அம்மனுக்கு மஞ்சள்நீராட்டும் நடைபெற்றது. இதில் துணை செயலாளர்கள் ரங்கநாதன், பாபு, ராமு, தரணி, குமார், அருள்குமார், சங்கர், பிரகாஷ், பாபு மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் முரளி, ரஜினிகாந்த், சங்கர், ஐயப்பன், சுரேஷ், கமலக்கண்ணன், செல்வம், பாபு, கண்ணன், சங்கர், ரமேஷ் உள்ளிட்ட கிராம பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு நெய்தீபம் ஏற்றி வைத்தும், பொங்கல் வைத்து அர்ச்சனைகள் செய்து சுவாமி தரிசனம் செய்தனர்.

இத்திருவிழாவை முன்னிட்டு கோயில் மற்றும் உபயதாரர்கள் சார்பில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கினர்.


உங்கள் செய்திகள் நிகழ்ச்சிகள் தினக்கனியில் வர வேண்டுமா தொடர்புக்கு:9443699066

WHATSAPP CHENEL

DHINAKANI.COM

தினகனி



# சீமான் மீது வழக்குப்பதிய மாதர் சம்மேளனம் எஸ்பியிடம் மனு



விருதுநகர், ஜூன் 23
விருதுநகர் எஸ்பி அலுவலகத்தில் இந்திய மாதர் தேசிய சம்மேளன மாவட்டச் செயலாளர் பாண்டிச்செல்வி தலைமையில் அளித்த மனுவில் கூறியிருப்பதாவது:

''நாம் தமிழர் கட்சி தலைவர் சீமான் பெண்களையும், பெண்கள் அமைப்புகளையும் தொடர்ச்சியாக இழிவுபடுத்தி கேவலமாக பேசி வருகிறார்.

சமீபத்தில் ரிதன்யா தற்கொலை வழக்கிலும் நாகரிகமற்ற முறையில் பேசி உள்ளார்.

சீமான் மீது வழக்குப்பதிவு செய்து சட்டப்படியான நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என தெரிவித்துள்ளனர்.

# சமூக வலைதளத்தில் ஆபாச கமெண்ட் தவெகவினர் மீது இளம்பெண் போலீசில் பரபரப்பு புகார்



கோவை, ஜூலை 22
கோவை இடையர்பாளையத்தை சேர்ந்தவர் வைஷ்ணவி (20). இவர் தவெகவில்இருந்து விலகி 3 மாதங்களுக்கு முன்பு திமுகவில் இணைந்தார். இவர்நேற்று கோவை மாநகர

போலீஸ்கமிஷனர்அலுவலகத்தில் அளித்த மனு: தமிழக வெற்றிக்கழகத்தில் உறுப்பினராக இணைந்து மக்கள் பணி செய்து வந்தேன். சமூக வலைதளங்களிலும் கட்சியின் கொள்கைகளை பரப்பி வந்தேன். அதன்பிறகு, கொள்கை வேறுபாடு, மக்கள் பணி செய்ய விடாமல் தடுத்ததால், அக்கட்சியிலிருந்து விலகி திமுகவில் இணைந்து பணிகளை செய்து வருகிறேன்.

கடந்த 3 மாதமாக, தவெக தொண்டர்கள் என்னைப்பற்றி அவதூறாகவும், ஆபாச வார்த்தைகளாலும் தரக்குறைவாக விமர்சித்து வருகிறார்கள்.

மேலும், என்னுடைய புகைப்படங்களை மிக மோசமாக சித்தரித்து மீம்ஸ், வீடியோவாக பரப்பி வருகின்றனர். எனவே, என்னைப்பற்றி அவதூறாக கருத்து பதிவிடும் தவெகவினர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு கூறியிருந்தார்.

இதுகுறித்து வைஷ்ணவி நிருபர்களிடம் கூறுகையில், ''என்னை பற்றி சமூக வலைதளங்களில் ஆபாசமாக தவெக நிர்வாகிகள், தொண்டர்கள் விமர்சனம் செய்து வருகின்றனர். அக்கட்சி தலைவர் விஜய் கண்டிப்பார் என எதிர்பார்த்தேன். ஆனால் அவர் கண்டிக்கவில்லை. எனவே விஜய் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்றார்.

# சிவகாசி அருகே பயங்கரம் பட்டாசு ஆலை வெடித்து 3 தொழிலாளிகள் கருகி பலி: 2 பெண்கள் படுகாயம்



சிவகாசி, ஜூலை 23
விருதுநகர் மாவட்டம், சிவகாசி அருகே நாரணாபுரம் – அனுப்பன்குளம் சாலையில் சீனிவாசா என்பவருக்கு சொந்தமானபட்டாசு ஆலை உள்ளது. இங்கு 50 அறைகள் உள்ளன. தீபாவளி பண்டிகைக்கு தேவையான பேன்சி ரக பட்டாசுகள் செய்யும் பணியில் நேற்று 60க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் ஈடுபட்டிருந்தனர். அப்போது ஒரு அறையில் மருந்து உராய்வு ஏற்பட்டு பயங்கரமாக வெடித்து சிதறியது. தீ அடுத்தடுத்த அறைகளுக்கும் பரவி 4 அறைகள்தரைமட்டமாகின. தகவல் அறிந்து சிவகாசி தீயணைப்பு வீரர்கள் வந்து தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். அதற்குள் சிவகாசி அருகே பள்ளபட்டியை சேர்ந்த கார்த்திகேயன் (25), சிவசாமி மனைவி சங்கீதா (43), குருசாமி மனைவி லட்சுமி (45) ஆகிய 3 பேர் உயிரிழந்தனர். மாரியம்மன் (50), நாகலட்சுமி (55) ஆகியோர் படுகாயங்களுடன் சிவகாசி அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். விபத்து குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் விடுத்துள்ள அறிக்கையில், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.4 லட்சம், பலத்த காயமடைந்தவருக்கு ரூ.1 லட்சம், லேசான காயமடைந்தவருக்கு ரூ.50 ஆயிரம் நிவாரண நிதி வழங்க உத்தரவிட்டுள்ளார்.

# ஆனைமலை புலிகள் காப்பகத்தில் இருவாச்சி பறவைகள் பாதுகாப்பு சிறப்பு மையம்: ரூ.1 கோடியில் தமிழ்நாடு அமைக்கிறது



சென்னை, ஜூலை 23
தமிழ்நாடு சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை செயலாளர் சுப்ரியா சாஹூ நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை: ஆனைமலை புலிகள் காப்பகத்தில் இருவாச்சி பறவைகள் பாதுகாப்புக்கான சிறப்பு மையத்தை நிறுவுவதற்கு தமிழ்நாடு அரசு நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது. இதன்மூலம் இந்தியாவில் இருவாச்சி பறவைகள் பாதுகாப்பில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. இருவாச்சி பறவைகள் வெப்பமண்டல காடுகளில் விதைகளை பரப்பி, மரங்களில் மீளுருவாக்கத்திற்கு ஒரு முக்கியமான பங்கை வகிக்கிறது. இருப்பினும், வாழ்விடச் சீரழிவு, காடழிப்பு மற்றும் காலநிலை மாற்றம் காரணமாக இந்த பறவை இனங்கள் அதிகரித்து வரும் அச்சுறுத்தல்களை எதிர்கொள்கின்றன. இப்பறவைகளின் பாதுகாப்பிற்கான அவசரத்தை உணர்ந்து, அறிவியல் ஆராய்ச்சி, வாழ்விட மறுசீரமைப்பு, சமூக ஈடுபாடு மற்றும் தேசிய மற்றும் சர்வதேசஒத்துழைப்புமூலம் இந்த சவால்களை எதிர்கொள்ள தமிழ் நாடு ஒரு பிரத்யேக மையத்தை நிறுவுகிறது.

அதன்படி, ஆனைமலை புலிகள் சரணாலயம், கோயம்புத்தூர் மாவட்டம் அதன் சுற்றுச்சூழல் வளம் மற்றும் தற்போதுள்ள பாதுகாப்பு உள்கட்டமைப்புக்காக தேர்ந்தெடுக்கப்பட்டது. மேற்கு தொடர்ச்சி மலைகளில் பெரிய இருவாச்சி, மலபார் சாம்பல் இருவாச்சி, மலபார் கருப்பு வெள்ளை இருவாச்சி மற்றும் இந்திய சாம்பல் இருவாச்சி ஆகிய 4 இனங்கள் காணப்படுகிறது. இந்த மையத்தை நிறுவுவதற்காக அழிந்து வரும் உயிரின பாதுகாப்பு நிதியத்தின்கீழ் மொத்தம் ரூ.1 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்த முயற்சி தமிழ்நாட்டின் துணிச்சலான பாதுகாப்பு பயணத்தில் மற்றொரு மைல்கல் ஆகும். இந்தியாவின் முதல் கடற்பசு பாதுகாப்பு சரணாலயம், நீலகிரி வரையாடு திட்டம், தேவாங்கு பாதுகாப்பு மையம் மற்றும் மதுக்கரையில் செயற்கை நுண்ணறிவுமூலம் யானைகள் பாதுகாப்பு திட்டம் ஆகியவற்றைநிறுவியதை தொடர்ந்து இருவாச்சி பறவைகளின் பாதுகாப்பபிற்கான சிறப்பு மையம் உருவாக்கப்பட்டதன் மூலம், இருவாச்சி பறவைகள் பாதுகாப்பை நிறுவனமயமாக்கிய முதல் மாநிலமாக தமிழ்நாடு மாறியுள்ளது.

அழிந்து வரும் பல உயிரினங்களை பாதுகாக்கும் பாரம்பரியத்தை கொண்ட ஆனைமலை புலிகள் காப்பகம், இப்போது இருவாச்சி சூழலியல் மற்றும் பாதுகாப்பு தலைமைத்துவத்திற்கான மையமாக செயல்படும். இந்த மையம் பல்லுயிர் பாதுகாப்பிற்கான எதிர்கால தலைமுறை பாதுகாவலர்களை ஊக்குவிக்கும் வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# ஆக.27ல் விநாயகர் சதுர்த்தி விழா: பெரம்பலூர், கரூர், திருச்சியில் விநாயகர் சிலைகள் தயாரிப்பு பணி தீவிரம்



பாடாலூர், ஜூலை 23
விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு பெரம்பலூர், திருச்சி, கரூர் உள்பட பல்வேறு இடங்களில் விநாயகர் சிலைகள் தயாரிப்பு பணி தீவிரமடைந்துள்ளது.

விநாயகர் சதுர்த்தி விழா இந்துக்களால் கோலாகலமாக கொண்டாடப்படும் ஒரு முக்கிய பண்டிகையாகும். ஆண்டுதோறும் ஆவணி மாதத்தின் வளர்பிறை சதுர்த்தி நாள் விநாயகர் சதுர்த்தியாக கொண்டாடப்படுகிறது. இந்த விழாவிற்காக அனைத்து பகுதிகளிலும் பொதுமக்கள் விரதம் இருந்து 2 அடி முதல் 12 அடி வரை பலவிதமான விநாயகர் சிலைகளை முக்கிய இடங்கள், வீடுகளில் வைத்து 3 நாள் சிறப்பு வழிபாடுகள் நடத்தி மூன்றாம் விநாயகர் சிலைகளை ஊர்வலமாக எடுத்து சென்று அந்தந்த பகுதிகளில் உள்ள ஆறு, கடல் உள்ளிட்ட நீர்நிலைகளில் கரைப்பார்கள்.

இந்த ஆண்டு ஆகஸ்ட் 27ம் தேதி விநாயகர் சதுர்த்தி விழா வருகிறது. இதற்காக விநாயகர் சிலைகள் பல இடங்களில் தயாரிக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக பெரம்பலூர், கரூர், திருச்சி மாவட்டங்களில் விநாயகர் சிலைகள் தயாரிப்பு பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. சிலை தயாரிப்பாளர்கள் விதவிதமான விநாயகர் சிலைகளை வடிவமைத்து, வர்ணத் பூசி, சதுர்த்தி விழாவுக்காக தயார் செய்து வருகின்றனர். சிலைகள் மாவு, களிமண் மற்றும் பல்வேறு வண்ணங்களை பயன்படுத்தி செய்யப்படுகிறது.

பெரம்பலூர் மாவட்டம் ஆலத்தூர் கேட் பகுதியில் விநாயகர் சிலைகள் தயாரிக்கும் பணி மும்முரமாக நடைபெற்று வருகிறது. இங்கு 2 அடி முதல் 12 அடி உயரம் வரையிலான விநாயகர் சிலைகள் உருவாக்கப்பட்டு உள்ளது. பரமசிவன் பார்வதி ஆகியோருடன், பல்வேறு வாகனங்களில், சிங்கத்தின் மீது விநாயகர் என்று விதவிதமாக விநாயகர் சிலைகள் வடிவமைக்கப்பட்டுள்ளது. விழுப்புரம் மாவட்டத்தில் இருந்து விநாயகர் சிலைகளுக்கான பாகங்கள் தனித்தனியாக ஆங்காங்கே தயாரிக்கப்பட்டு பெரம்பலூர் மாவட்டம் ஆலத்தூர்கேட் பகுதிக்கு வரவழைக்கப்படுகின்றன.

பின்னர்இங்குஅவற்றை நேர்த்தியாக பொருத்தி, சிலைகள் செய்யப்பட்டு வர்ணம் பூசப்பட்டு முழு வடிவம் கொடுக்கப்படுகிறது. இங்கு தயாரிக்கப்படும் விநாயகர்சிலைகளின் விலை ரூ.3,500 முதல் ரூ.25 ஆயிரம் வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. தேவைக்கு ஏற்ப வாடிக்கையாளர்கள் விநாயகர் சிலைகளின் வடிவமைப்பை பார்த்து ஆர்டர் கொடுத்து செல்கின்றனர். விநாயகர் சதுர்த்திக்கு இன்னும் ஒரு மாதத்திற்கு மேலான நாட்கள் உள்ள நிலையில் தற்போதே விநாயகர் சிலைக்கு ஆர்டர்கள் குவிந்து வருவதால், கைவினை கலைஞர்கள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

விநாயகர் சதுர்த்தி முடிந்து நவராத்திரி வருவதால் கொலு பொம்மைகள் தயாரிக்கும் பணியிலும் தீவிரம் காட்டி வருகின்றனர். கரூர்மாவட்டம் திருச்சிகரூர் மணப்பாறை சாலையில் உள்ள மயிலாடி பகுதியில் விநாயகர் சிலைகள் இரண்டரை அடி முதல் 10 அடி வரை தயாரிக்கப்பட்டுள்ளது. இதேபோல் திருச்சி கொண்டையம்பேட்டை பகுதிகளில் விநாயகர் சிலைகள் தயாரிப்பு பணி தீவிரமடைந்துள்ளது.

# திருச்செந்தூர் சரவணப்பொய்கை குளம் புனரமைப்பு: விரைவில் பக்தர்களுக்கு அனுமதி



திருச்செந்தூர், ஜூலை 23
திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயிலுக்கு சொந்தமான சரவணப்பொய்கை குளம் புனரமைக்கப்பட்டு புதுப்பொலிவுடன் காட்சியளிக்கிறது. அதனை விரைவில் பக்தர்கள் பார்வையிடுவதற்கு அனுமதி வழங்கப்பட உள்ளது. முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் இரண்டாம் படை வீடான திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயில் அழகிய கடற்கரையோரம் அமைந்துள்ளது. இதனால் இங்கு வரும் பக்தர்கள் கடல் மற்றும் நாழிக்கிணறு போன்ற புண்ணிய தீர்த்தங்களில் நீராடி சுவாமியை வழிபடுகின்றனர். அதேபோல இக்கோயிலில் பிரசித்தி பெற்ற வள்ளியம்மன் குகை கோயிலையும் பக்தர்கள் வழிபட்டு செல்கின்றனர். இதைத்தாண்டி கோயிலில் சரவணப் பொய்கை குளத்தையும் பக்தர்கள் பார்த்து வருகின்றனர்.

அதேபோல சரவணப் பொய்கையில் கோயில் யானை தெய்வானை குளிப்பதற்கு நீச்சல் குளமும் உள்ளது. தற்போது கோயிலில் ரூ.300 கோடி செலவில் பெருந்திட்ட வளாகப் பணிகள் நடந்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக சரவணப் பொய்கை குளமும் நீண்ட காலத்திற்குப் பிறகு தற்போது புனரமைக்கப்பட்டுள்ளது. குளத்தில் உள்ள தாமரைப்பூ, கார்த்திகை பெண்கள் போன்ற சிற்பங்கள் புனரமைக்கப்பட்டு வர்ணம்பூசப்பட்டு புதுப்பொலிவுடன் காட்சியளிக்கிறது. இன்னும் சில தினங்களில் பக்தர்கள் சரவண பொய்கை குளத்தை பார்வையிடுவதற்கு அனுமதி அளிக்கப்பட உள்ளதாக திருக்கோயில் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.


# எடப்பாடி பழனிசாமியை வரவேற்க வைத்த பேனர் விழுந்து விபத்து



திருவாரூர், ஜூலை 23
திருவாரூர் மாவட்டத்தில் கடந்த 18 ஆம் தேதி முதல் தீவிரமாகசுற்று பயணத்தில் எடப்பாடி பழனிசாமி ஈடுபட்டு வருகிறார். இதன் தொடர்ச்சியாக திருவாரூர் மாவட்டம் முழுவதும் சாலை ஓரங்களில் அதிமுக நிர்வாகிகள் வந்து கட்சிபேனர்களைஅமைத்தும் கொடிகளை வைத்தும் அவரை வரவேற்று உள்ளனர்.

இந்த நிலையில் திருவாரூர் தேசியநெடுசாலையில் உள்ள தனியார் அரங்குக்கு அருகே எடப்பாடி பழனிசாமிக்காக வைக்கப்பட்டு இருந்த பேனர் சாலையில் விழுந்து அப்பகுதியில் சென்ற ஒருவர் மீது விழுந்து விபத்து ஏற்பட்டது. உடனடியாக அந்த சாலையில் இருந்த பாதுகாப்பு போலீசார் அவருக்கு முதலுதவி அளித்து அனுப்பிவைத்தனர். இதைதொடர்ந்து உடனடியாக அந்த பேனரை அகற்றிசாலையில்இருந்து எடுத்துவைத்தனர் சாலை ஓரத்தில் எடப்பாடி பழனிசாமிக்காக வைக்கபட்டிருந்த பேனர் விழுந்து ஒருவர் காயம் அடைந்தது திருவாரூர் நகரில் பொதுமக்கள் இடையில் ஒருஅதிர்ச்சியை ஏற்படுத்தியது. இந்த சாலை விபத்துக்கு காரணம் அனுமதியை மீறி பேனர் அதிக அளவில் வைக்கப்பட்டுஉள்ளது என குற்றமும் தெரிவித்துஉள்ளானர்.

# கடந்த 4 ஆண்டில் மகளிருக்கு ரூ.1.21 லட்சம் கோடி கடனுதவி: மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சாதனை





சென்னை , ஜூலை 23
தமிழ்நாடு அரசு, மகளிரின் சமூக பொருளாதார மேம்பாட்டை உள்ளடக்கிய செயல்பாட்டினையே முதன்மை நோக்கமாகக் கொண்டு அனைத்து வறுமை ஒழிப்பு திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது. பெண்களின் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்காக தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் என்ற ஒரு தனி நிறுவனத்தை தொடங்கிய தன் மூலம் ஒரு முன்னோடி மாநிலமாக தமிழ்நாடு அரசு திகழ்கிறது. முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மகளிர் சமூக, பொருளாதார மேம்பாடு அடைந்திட வேண்டும் என்ற உன்னத தொலைநோக்கு பார்வையுடன், முதன்முறையாக 1989ஆம் ஆண்டு தர்மபுரி மாவட்டத்தில் சுய உதவிக் குழு இயக்கம் என்ற மகத்தான இயக்கம் தொடங்கவித்திட்டார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழியில் நல்லாட்சி புரிந்து வரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சிக்கு மேலும் பெருமை சேர்க்கும் வகையில், தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் பல்வேறு சாதனைகளைப் படைத்த வருகிறது. சுய உதவிக் குழுக்களின் பொருளாதாரத் தேவையைக் கருத்தில் கொண்டு, அவைகளின் தடையற்ற செயல்பாடுகளுக்காக வங்கிக் கடன் இணைப்புகள் வழங்கப்படுகின்றன. தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற 2021, 2022ஆம் நிதி ஆண்டில் 4,08,740 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.21,392.52 கோடி, 20222023ஆம் நிதி ஆண்டில் 4,49,209 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.25,642.01 கோடி, 20232024ஆம் நிதி ஆண்டில் 4,79,350 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 30,074.76 கோடி, 20242025ஆம் நிதி ஆண்டில் 4,84,659 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 35,189.87 கோடி வழங்கி சாதனை படைக்கப்பட்டுள்ளது.20252026ஆம் ஆண்டிற்கான நிதிநிலை யறிக்கையில், சுய உதவிக் குழு மகளிருக்கு 37 ஆயிரம் கோடி ரூபாய் வங்கிக் கடன் இணைப்பு வழங்க, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளதைத் தொடர்ந்து, 18.07.2025 வரை 1,04,538 சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 13,58,994 உறுப்பினர்களுக்கு 9,113.24 கோடி ரூபாய் வங்கிக் கடன் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசு பொறுப்பேற்ற நான்காண்டுகளில் 19,26,496 சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 2 கோடியே 50 லட்சத்து 44 ஆயிரத்து 448 சுய உதவிக் குழு மகளிருக்கு 1,21,415.40கோடி ரூபாய் வங்கிக் கடன் இணைப்பு வழங்கி சாதனை படைத்து, சுய உதவிக் குழுக்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து வருகிறது.

# அதிமுக உட்கட்சி விவகாரம் தொடர்பான மனுக்கள் மீது விசாரணை நடத்தி முடிக்க காலக்கெடு நிர்ணயிக்கத் தேவை இல்லை : தேர்தல் ஆணையம்




சென்னை, ஜூலை 23
அதிமுக உட்கட்சி விவகாரம் தொடர்பான மனுக்கள் விரைவாக விசாரித்து முடிக்கப்படும் என தேர்தல் ஆணையம் சென்னை உயர்நீதிமன்றத்தில் உறுதி அளித்துள்ளது. அதிமுக பொதுச்செயலாளராக எடப்பாடி பழனிசாமி தேர்ந்தெடுக்கப்பட்டதை எதிர்த்து ஒருதரப்பு சார்பில் உரிமையியல் வழக்குகள் தொடரப்பட்டன. மேலும், இந்த வழக்குகள் முடிவுக்கு வரும் வரை அதிமுகவுக்கு இரட்டை இலை சின்னத்தை ஒதுக்க கூடாது எனவும் அவர்கள் தேர்தல் ஆணையத்திடம் மனு அளித்தன. இதனிடையே, இந்த மனுக்களை தேர்தல் ஆணையம் விசாரிக்க எதிர்ப்பு தெரிவித்து, எடப்பாடி பழனிசாமி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார். மேலும், அதிமுக உட்கட்சி விவகாரம் தொடர்பாக அளிக்கப்பட்ட புகார்கள் மீதான ஆரம்பகட்ட விசாரணையை நடத்தி முடிக்க, தேர்தல் ஆணையத்துக்கு காலவரம்பு நிர்ணயிக்கக் கோரியும் சென்னை உயர் நீதிமன்றத்தில் அவர் மனுத்தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு இன்று நீதிபதிகள் ஆர்.சுப்ரமணியன், கே.சுரேந்தர் அமர்வு முன் விசாரணைக்கு வந்தது. அப்போது தேர்தல் ஆணையம்தாக்கல் செய்த பதில் மனுவில், "அதிமுக உட்கட்சி விவகாரம் தொடர்பான மனுக்கள் மீது விசாரணை நடத்தி முடிக்க காலக்கெடு நிர்ணயிக்கத் தேவை இல்லை. பீகார் தேர்தல் தொடர்பாக வேலைப் பளு அதிகமாக உள்ளது. சென்னை உயர்நீதிமன்ற உத்தரவுப்படி ஏற்கனவே 10 பேரிடம் விசாரணை நடத்தப்பட்டு, எழுத்துப்பூர்வமான மனுக்கள் பெறப்பட்டுள்ளது. இயற்கை நீதியின் அடிப்படையில் மனுதாரர்களுக்கு போதுமான கால அவகாசம் வழங்கப்பட வேண்டும். ஆரம்பகட்ட விசாரணைமுடிக்கப்பட்ட பின்பு, இந்த பிரச்சனை குறித்து உரிய முடிவெடுக்கப்படும்" இவ்வாறு தெரிவித்துள்ளது. தேர்தல் ஆணையம் பதிலை அடுத்து, வழக்கு விசாரணை நாளைக்கு ஒத்திவைக்கப்பட்டது.

# மெரினா கடற்கரையை தூய்மையாக வைத்திருக்க பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்: சென்னை மாநகராட்சி வேண்டுகோள்

சென்னை, ஜூலை 23
மெரினா கடற்கரையை தூய்மையாக வைத்திருக்க பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என சென்னை மாநகராட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது. சென்னை மாநகராட்சி திருவான்மியூர், பாலவாக்கம், உத்தண்டி மற்றும் மெரினா கடற்கரையை நீலக்கொடி கடற்கரைகளாக மேம்படுத்தும் நடவடிக்கைகளை தொடங்கியுள்ளது. நீச்சல் குளம் அருகே உள்ள மெரினா கடற்கரையை நீலக்கொடி கடற்கரையாக மாற்றும் பணி ஏறக்குறைய முடிவடைந்துள்ளது. புதிய வசதிகள் இந்த மாத இறுதிக்குள் திறந்து வைக்கப்படும். இந்த முயற்சிக்கு மக்களிடையே நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது.

அந்தவகையில்மெரினா கடற்கரையை தூய்மையாக வைத்திருக்க சென்னை மாநகராட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது. அதில் எடுக்கப்பட்டுள்ள கடற்கரையில் நடவடிக்கைகள் பின்வருமாறு,

★மெரினா கடற்கரையை சுத்தமாக வைத்திருக்கும் பணியில் இன்று முதல் 100 தூய்மை பணியாளர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

★உழைப்பாளர் சிலை முதல் கலங்கரை விளக்கம் வரை 2.4 கிமீ தூரத்திற்கு, காலை 6 மணி முதல் 2 மணி வரை, பிற்பகல் 2 மணி முதல் இரவு 10 மணி வரை தூய்மை பணியில் ஈடுபடவுள்ளனர்.

★காலை 70 பணியாளர்களும், மாலை 30 பணியாளர்களும் தொடர்ந்து பணியில் இருப்பார்கள்.

★மேலும் கடற்கரை மணல் பரப்பை தூய்மை படுத்தும் டிராக்டர்களும் தொடர்ந்து தூய்மை பணியில் ஈடுபடும்.

★மெரினா கடற்கரை தூய்மை பணியை சென்னை மாநகராட்சி தனியாருக்கு ஒப்படைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# கடந்த 4 ஆண்டுகளில் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.1,21,415 கோடி வங்கிக்கடன் இணைப்பு: தமிழக அரசு அறிவிப்பு

சென்னை, ஜூலை 23
2,50,44,448 சுய உதவிக் குழு மகளிருக்கு ரூ.1,21,415 கோடி வங்கிக்கடன் இணைப்பு வழங்கி தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சாதனை படைத்துள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக தமிழக அரசு வெளியிட்ட அறிக்கை: தமிழ்நாடு அரசு, மகளிரின் சமூக பொருளாதார மேம்பாட்டை உள்ளடக்கிய செயல்பாட்டினையே முதன்மை நோக்கமாகக் கொண்டு அனைத்து வறுமை ஒழிப்பு திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது. பெண்களின் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்காக தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் என்ற ஒரு தனி நிறுவனத்தை தொடங்கிய தன் மூலம் ஒரு முன்னோடி மாநிலமாக தமிழ்நாடு அரசு திகழ்கிறது.



முன்னாள் முதல்வர் கலைஞர் மகளிர் சமூக, பொருளாதார மேம்பாடு அடைந்திட வேண்டும் என்ற உன்னத தொலை நோக்கு பார்வையுடன், முதன்முறையாக 1989ம் ஆண்டு தர்மபுரி மாவட்டத்தில் சுய உதவிக் குழு இயக்கம் என்ற மகத்தான இயக்கம் தொடங்க வித்திட்டார். கலைஞரின் வழியில் நல்லாட்சி புரிந்து வரும் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சிக்கு மேலும் பெருமை சேர்க்கும் வகையில், துணை முதலமைச்சரின் வழிகாட்டுதலில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் பல்வேறு சாதனைகளைப் படைத்த வருகிறது.

சுய உதவிக் குழுக்களின் பொருளாதார தேவையைக் கருத்தில் கொண்டு, அவைகளின் தடையற்ற செயல்பாடுகளுக்காக வங்கிக் கடன் இணைப்புகள் வழங்கப்படுகின்றன. முதலமைச்சரின் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற 202122ம் நிதி ஆண்டில் 4,08,740 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.21,392.52 கோடி, 202223ம் நிதி ஆண்டில் 4,49,209 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.25,642.01 கோடி, 202324ம் நிதி ஆண்டில் 4,79,350 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.30,074.76 கோடி, 202425ம் நிதி ஆண்டில் 4,84,659 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.35,189.87 கோடி வழங்கி சாதனை படைக்கப்பட்டுள்ளது. 202526ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், சுய உதவிக் குழுமகளிருக்குரூ.37,000 கோடி வங்கிக் கடன் இணைப்பு வழங்க முதல்வர் அறிவித்துள்ளதை தொடர்ந்து, 18.7.2025 வரை 1,04,538 சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 13,58,994 உறுப்பினர்களுக்கு ரூ.9,113.24 கோடி வங்கிக் கடன் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. திராவிட மாடல் அரசு பொறுப்பேற்ற நான்காண்டுகளில் 19,26,496 சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 2 கோடியே 50 லட்சத்து 44 ஆயிரத்து 448 சுய உதவிக் குழு மகளிருக்கு ரூ.1,21,415.40 கோடி வங்கிக் கடன் இணைப்பு வழங்கி சாதனை படைத்து, சுய உதவிக் குழுக்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து வருகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தனியார் பள்ளிகளுக்கு நிரந்த அங்கீகாரம் வழங்குவது தொடர்பான பள்ளி கல்வித்துறை இயக்குநரின் பரிந்துரையை பரிசீலிக்க கோரி வழக்கு: தமிழக அரசு பதில் தர உயர் நீதிமன்றம் உத்தரவு

சென்னை, ஜூலை 23
தனியார் பள்ளிகளுக்கு நிரந்தர அங்கீகாரம் வழங்குவது தொடர்பான தனியார் பள்ளிகள் இயக்குனரின் பரிந்துரையை பரிசீலிக்குமாறு உத்தரவிடக் கோரிய மனுவுக்கு பதிலளிக்குமாறு தமிழக அரசுக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அகில இந்திய தனியார் கல்வி நிறுவன சங்கத்தின் மாநில பொதுசெயலாளர் பழனியப்பன் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில், 1994ம் ஆண்டு தனியார் பள்ளிகளுக்கு நிரந்தர அங்கீகாரம் வழங்கும் வகையில் அரசாணை பிறப்பிக்க ப்பட்டது. ஆனால், அந்த உத்தரவை அமல்படுத்தாமல் தற்காலிக அங்கீகாரம் மட்டுமே வழங்கபட்டு வருகிறது. இதை எதிர்த்து கடந்த 2021ம் ஆண்டு தொடரப்பட்ட வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், நிரந்தர அங்கீகாரம் வழங்கும் வகையில் 1994ம் ஆண்டு பிறப்பிக்கப்பட்ட அரசாணையை அமல்படுத்துமாறு உத்தரவிட்டது. இந்த உத்தரவை அமல்படுத்துவதற்கு பதிலாக நிரந்தர அங்கீகாரம் வழங்கும் அரசாணையை, எந்த காரணமும் தெரிவிக்காமல் அரசு திரும்ப பெற்று கொண்டது.

அதன்பிறகு, 2024ம் ஆண்டு தனியார் பள்ளிகளுக்கு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே அங்கீகாரம் வழங்கும் வகையில் புதிய சட்டம் கொண்டுவரப்பட்டது. இது சட்ட விரோதமானது. இது போல குறிப்பிட்ட கால வரம்பு நிர்ணயிக்க எந்த அவசியமும் இல்லை என்பதால் நிரந்தர அங்கீகாரம் வழங்கக் கோரி கல்வித்துறை அதிகாரிகளுக்கு மனுக்கள் அளிக்கப்பட்டது. இந்த சட்டத்தை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கும் உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. இந்நிலையில், நீண்ட காலமாக இயங்க கூடிய பள்ளிகளுக்கு நிரந்தர அங்கீகாரம் வழங்குவது தொடர்பாக கடந்த மார்ச் மாதம் தனியார் பள்ளிகள் இயக்குனர் பரிந்துரை அளித்தார். அந்த பரிந்துரையை பரிசீலித்து நிரந்தர அங்கீகாரம் வழங்குவது தொடர்பாக தகுந்த உத்தரவு பிறப்பிக்குமாறு கல்வித்துறை செயலாளருக்கு உத்தரவிட வேண்டும் என்று கோரப்பட்டிருந்தது.



இந்த மனுவை விசாரித்த நீதிபதி சி.குமரப்பன், கல்வித்துறை செயலாளர் மற்றும் தனியார் பள்ளி இயக்குனர் ஆகஸ்ட் 18ம் தேதிக்குள் பதிலளிக்குமாறு உத்தரவிட்டார். இதேபோல, கல்வி உரிமை சட்டத்தை முழுமையாக அமல்படுத்துவதை உறுதி செய்யும் வகையில், ஆரம்ப பள்ளிகளை நடுநிலை பள்ளியாக உயர்த்துவது தொடர்பாக அகில இந்திய தனியார் கல்வி நிறுவன சங்கத்தின் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்த நீதிபதி குமரப்பன், ஆகஸ்ட் 22ம் தேதிக்குள் பதிலளிக்குமாறு கல்வித்துறை செயலாளருக்கு உத்தரவிட்டார்.

# கடந்தை வண்டு கடித்து தம்பதி பலி



செங்கோட்டை, : தென்காசி மாவட்டம், செங்கோட்டை அருகே சீவநல்லூரில் அம்மையார் ஊற்று பகுதியில் உள்ள ஐயப்பன் கோயிலில் அன்னதானம் நடைபெற்றது. இதற்காக அப்பகுதி மக்கள் சென்றனர். அப்போது, வழியில் தென்னைமரத்தில் இருந்த கடந்தை வண்டு கூடு காற்றில் திடீரென கலைந்து அதிலிருந்து புற்றீசல்போல கிளம்பிய வண்டுகள் அன்னதானம் சாப்பிட சென்றவர்களை கடித்தன.

இதில், லட்சுமணன் (85), அவரது மனைவி மகராசி (82) மற்றும் சிவலிங்கம் மனைவி சாந்தி (65), மாரிச்செல்வம் மனைவி சண்முகபாரதி (29) மற்றும் ஆறுமுகம் (75) ஆகியோர்படுகாயம்அடைந்து தென்காசி அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அங்கு லட்சுமணன், அவரது மனைவி மகராசி ஆகியோர் உயிரிழந்தனர். மற்ற 3 பேரும் மேல்சிகிச்சைக்காக நெல்லை அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

# அமெரிக்காவில் நடந்த விளையாட்டு போட்டி இந்திய அணி சார்பில் தமிழக போலீசார் 50 பதக்கங்களை வென்றனர்: டிஜிபி சங்கர் ஜிவால் நேரில் பாராட்டு

சென்னை, ஜூலை 23
அமெரிக்காவில் நடந்த விளையாட்டு போட்டியில் இந்திய காவல்துறை விளையாட்டு அணி சார்பில் தமிழக போலீசார் தங்கம் உள்பட 50 பதக்கங்கள் வென்றனர். உலக காவல் மற்றும் தீயணைப்பு விளையாட்டு போட்டிகள்2025, அமெரிக்கா அலபாமா மாகாணத்தில் கடந்த 27ம் தேதி முதல் 6ம் தேதி வரை நடிந்தது. இந்த போட்டியில் இந்திய காவல்துறை விளையாட்டு அணி சார்பாக தமிழக காவல்துறையில் இருந்து காவலர்கள் தினேஷ், அர்ஜூன், அரிகிருஷ்ணன், இளவரசி, சரண்யா ஆகியோர் பங்கேற்று முறையே 3 தங்கம், 4 வெள்ளி மற்றும் 4 வெண்கலம் என மொத்தம் 11 பதக்கங்கள் பெற்றனர்.

மேலும், இதே போட்டியில் வயது வகை பிரிவில் ஐபிஎஸ் அதிகாரி மயில்வாகனன் தலைமையில் சென்ற 6 இன்ஸ்பெக்டர்கள், 1 சப்இன்ஸ்பெக்டர், ஒரு சிறப்பு சப்இன்ஸ்பெக்டர், 4 தலைமை காவலர் மற்றும் 3 பெண் தலைமை காவலர்கள் கலந்து கொண்டனர். பல்வேறு பிரிவுகளில் நடந்த போட்டியில் 19 தங்கம், 11 வெள்ளி மற்றும் 9 வெண்கலம் என மொத்தம் 39 பதக்கங்கள் வென்று தமிழ்நாட்டிற்கும், தமிழக காவல்துறைக்கும் பெருமை சேர்த்துள்ளனர்.



அமெரிக்காவில் நடந்த போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற ஐபிஎஸ் அதிகாரி மயில்வாகனன் உள்பட அனைத்து போலீசாரையும் தமிழ்நாடு காவல் துறை டிஜிபி சங்கர் ஜிவால் நேற்று தனது அலுவலகத்திற்கு அழைத்து பாராட்டினார்.

இந்த நிகழ்ச்சியில் ஆயுதப்படை ஐஜி விஜயகுமாரி, ஐஜி பிரவீன் குமார் அபினபு ஆகியோர் உடனிருந்தனர்.

# ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கைக்கு தடை இல்லை: ஐகோர்ட் கிளை உத்தரவு

மதுரை, ஜூலை 23
'ஓரணியில் தமிழ்நாடு' உறுப்பினர் சேர்க்கை நடத்தலாம் என்று ஐகோர்ட் கிளை உத்தரவிட்டுள்ளது. சிவகங்கை மாவட்டம், திருப்புவனத்தைச் சேர்ந்த ராஜ்குமார், ஐகோர்ட் மதுரை கிளையில் தாக்கல் செய்த பொது நல மனு: தமிழகத்தில் ஆளுங்கட்சியான திமுக, ஓரணியில் தமிழ்நாடு என்ற பெயரில் உறுப்பினர் சேர்க்கை இயக்கம் நடத்தி வருகிறது. இதற்காக திமுகவினர் வீடு வீடாகச் சென்று முதல்வர் படத்துடன் சுவரொட்டியை ஒட்டுகின்றனர். பின்னர் குடும்ப உறுப்பினர்களின் ஆதார் எண், வாக்காளர் அடையாள அட்டை, வங்கி கணக்கு புத்தக நகல் கேட்கின்றனர். தனிப்பட்ட செல்போன் எண் கேட்டு பெறுகின்றனர். அந்த எண் கொடுக்கப்பட்டதும் ஓடிபி வருகிறது. அந்த ஓடிபியை தெரிவித்ததும் திமுகவில் உறுப்பினராக சேர்ந்ததாக தகவல் வருகிறது.

திமுகவினர் அரசியல் பிரசாரத்துக்காக பொது மக்களிடமும் இருந்து ஆதார் விபரங்களை சேகரிப்பது அரசியலமைப்பு சட்டத்துக்கு விரோதம் என அறிவிக்க வேண்டும். இதுதொடர்பாக ஒன்றிய அரசு மற்றும் ஆதார் தலைமைச் செயல் அதிகாரி விசாரணை நடத்த வேண்டும். திமுக பொதுச்செயலாளர் மீது நடவடிக்கை எடுக்க உத்தரவிட வேண்டும். இவ்வாறு தெரிவித்திருந்தார்

இந்த மனு நீதிபதிகள் எஸ்.எம்.சுப்பிரமணியம், மரிய கிளாட் அமர்வு முன்பாக விசாரணைக்கு வந்தது. அப்போதுநீதிபதிகள், '' ''ஓடிபியை எதற்காக கேட்கிறார்கள்? ஓடிபி விபரங்களை பகிர வேண்டாமென, காவல்துறையினர் அறிவுறுத்தி, வெளிப்படையாக விளம்பரம் செய்கையில் எதற்காக கேட்கிறார்கள்?'' என கேள்வி எழுப்பினர். அதற்கு அரசு தரப்பில், ''திமுக சார்பில் உறுப்பினர் சேர்க்கைக்காக இந்த பிரசாரம் செய்யப்படுகிறது'' என தெரிவிக்கப்பட்டது. 'தனது கட்சியின் உறுப்பினர் விபரங்களை சேகரிப்பதில் தவறில்லை. ஆனால் அந்த விபரங்கள் எவ்வாறு கையாளப்படும்? எவ்வாறு பாதுகாக்கப்படும்? எவ்வாறு அழிக்கப்படும் என்பது தொடர்பான எந்த திட்டமும், விபரங்களும் இல்லை. மக்களின் தரவுகளை பாதுகாப்பது தொடர்பான தொழில்நுட்ப தகவல் பாதுகாப்பு விதிகள் இன்னமும் உருவாக்கப்படவில்லை. இது மிகவும் ஆபத்தானது என குறிப்பிட்ட நீதிபதிகள், ஓரணியில் தமிழ்நாடு என்னும் பெயரில் உறுப்பினர் சேர்க்கையின்போது ஓடிபியை பெற இடைக்கால தடை விதிக்கப்படுகிறது. உறுப்பினர் சேர்க்கையை நடத்தலாம். ஆனால் ஓடிபி விபரங்களை கேட்கக் கூடாது.

இவ்வழக்கில் இந்திய தேர்தல் ஆணையத்தை மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரராக சேர்க்க வேண்டும். டிஜிட்டல் முறையில் தனிநபர் தகவல் எவ்வாறு பாதுகாக்கப்படுகிறது? என்பது குறித்தும், வழக்கு தொடர்பாகவும் ஒன்றிய, மாநில அரசுகள் பதில் மனு தாக்கல் செய்யவும் உத்தரவிட்டு வழக்கினை 2 வாரத்திற்கு ஒத்தி வைத்தனர்.

# காலி இடம் குறித்து தகவல் தெரிவிக்காத காரணத்தால் பணி நியமனத்திற்கு ஒப்புதலளிக்க மறுக்க கூடாது: உதவி பேராசிரியர்கள் நியமன வழக்கில் ஐகோர்ட் உத்தரவு

சென்னை, ஜூலை 23
காலியிடம் குறித்து தகவல் தெரிவிக்கவில்லை என்று கூறி உதவி பேராசிரியர்கள் நியமனத்துக்கு ஒப்புதல் அளிக்க மறுக்க முடியாது எனத் தெரிவித்த சென்னை உயர்நீதிமன்றம், லயோலா கல்லூரியில் 18 உதவி பேராசிரியர்கள், ஒரு நூலகர் நியமனத்துக்கு ஒப்புதல் வழங்குமாறு தமிழக கல்லூரி கல்வி இணை இயக்குனருக்கு உத்தரவிட்டுள்ளது. சென்னை லயோலா கல்லூரியில் 18 உதவிப் பேராசிரியர்கள், ஒரு நூலகர் நியமனத்துக்கு ஒப்புதல் வழங்க மறுத்து கல்லூரி கல்வி இணை இயக்குனர் பிறப்பித்த உத்தரவை ரத்து செய்து, 19 பேர் நியமனங்களுக்கு ஒப்புதல் அளிக்குமாறு உத்தரவிடக் கோரி, கல்லூரி நிர்வாகம் சார்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கு,

நீதிபதி சி.குமரப்பன் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது, லயோலா கல்லூரி தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் ஐசக் மோகன்லால், கல்லூரியில் 149 ஆசிரியர் பணியிடங்களுக்கும், 59 ஆசிரியர் அல்லாத பணியிடங்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில், இந்த பணியிடங்களை நிரப்ப கல்லூரிக்கு முழு உரிமை உள்ளது என்று வாதிட்டார்.

அரசுத்தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் சி.ஜெயபிரகாஷ், 19992000ம் ஆண்டில் கல்லூரிக்கு அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் விவரம், 1999ம் ஆண்டு முதல் பணியாற்றும் பேராசிரியர்கள் விவரம், நியமனம் தொடர்பானகல்லூரி குழுதீர்மான விவரங்கள் உள்ளிட்ட விவரங்கள் சமர்ப்பிக்கப்படாததால், நியமனங்களுக்கு ஒப்புதல் வழங்கப்படவில்லை என்று விளக்கமளித்தார். இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி, சிறுபான்மை கல்லூரிகளில், பேராசிரியர்களின் கல்வித் தகுதி குறித்து தீர்மானிக்க மட்டுமே மாநில அரசுக்கு அதிகாரம் உள்ளது. காலியிடங்கள் விவரங்களை தரவில்லை என்று உதவி பேராசிரியர்கள் நியமனத்துக்கு ஒப்புதல் வழங்க மறுக்க முடியாது. எனவே, ஒப்புதல் வழங்க மறுத்த உத்தரவு ரத்து செய்யப்படுகிறது. மூன்று மாதங்களில் லயோலா கல்லூரியில் மேற்கொள்ளப்பட்ட 19 நியமனங்களுக்கும் ஒப்புதல் அளிக்க வேண்டும் என்று கல்லூரி கல்வி இணை இயக்குனருக்கு உத்தரவிட்டார்.

# வரதட்சணை கேட்டு மாடியில் இருந்து தள்ளிவிட்ட எஸ்ஐ மகன்: காயங்களுடன் ஆம்புலன்சில் வந்து கலெக்டரிடம் மனைவி புகார்

வேலூர், ஜூலை 23
வேலூர் கலெக்டர் அலுவலகத்தில் கலெக்டர் சுப்புலட்சுமி தலைமையில் நேற்று நடந்த மக்கள் குறைதீர்வு கூட்டத்திற்கு வேலூர் சதுப்பேரியைச் சேர்ந்த நர்கீஸ்(21) என்பவர் ஆம்புலன்சில் வந்தார். அவர் கலெக்டரிடம் கொடுத்த மனு விவரம் வருமாறு: எனது சொந்த ஊர் ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு அடுத்த மேல்நெல்லி கிராமம். நான் பிஎஸ்சி படித்துள்ளேன். எனக்கும் திருவண்ணாமலை மாவட்டம் வெம்பாக்கம் தாலுகாவில் உள்ள பிரம்மதேசம் காவல் நிலையத்தில் எஸ்ஐ ஆக பணிபுரிபவரின் மகன் காஜாரபிக்கிற்கும் 2023ல் திருமணம் நடந்தது.

அப்போது எனது பெற்றோர் 30 பவுன் நகை, பைக் வாங்க கணவருக்கு ரூ.1 லட்சத்து 50 ஆயிரம், 500 கிராம் வெள்ளிப்பொருட்கள்,



ரூ.3 லட்சம் மதிப்பில் சீர் வரிசை மற்றும் திருமண செலவு ரூ.6 லட்சம் கொடுத்தனர்.

நான் குறைவான நகை போட்டு வந்ததாக கூறி கணவர் குடும்பத்தினர் துன்புறுத்தி வந்தனர். எனக்கு சரியான சாப்பாடு வழங்கவில்லை. இதுகுறித்து எனது பெற்றோரிடம் தெரிவித்தேன். இரு குடும்பத்தினரும் கடந்த டிசம்பர் மாதம் பேசி சமாதானம் செய்தனர். சில நாட்களில் மீண்டும் எனது கணவர் ரூ.10 லட்சமும், பெற்றோர் வசிக்கும் வீட்டை அவரது பெயருக்கு எழுதி வைக்கும்படியும் கொடுமைப்படுத்தினார். என் மாமனார் வீட்டில் பிரச்னை ஏற்பட்டு, என்னையும், கணவரையும் வேலூர் சதுப்பேரியில் தனிக்குடித்தனம் வைத்தனர். அதன்பிறகும் என்னை தனியாக வீட்டில் வைத்து பூட்டிசெல்வார். கடந்த மாதம் 3ம் தேதி எனது கணவர் என்னிடம் தகராறில் ஈடுபட்டு தாக்கினார். மேலும் வீட்டின் மொட்டை மாடியில் இருந்து என்னை கீழே தள்ளி கொலை செய்ய முயற்சித்தார். இதில் எனக்கு இடுப்பு, இரண்டு கால்களில் எலும்பு முறிவு ஏற்பட்டு நகரக் கூட முடியாமல் கதறினேன். அக்கம் பக்கத்தினர் வந்து மருத்துவமனையில் சேர்த்தனர்.

இதுதொடர்பாக அரியூர் போலீசில் புகார் அளித்தேன். அவர்கள் எந்த ஒரு நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. இதுவரை தனியார் மருத்துவமனையில் ரூ.6 லட்சம் வரைசெலவு செய்துள்ளேன். கணவர் உள்பட யாரும் என்னை வந்து பார்க்கவில்லை. எனவே கூடுதல் வரதட்சணை கேட்டு சித்ரவதை செய்து, துன்புறுத்தி, கொலை செய்ய முயற்சி செய்த கணவர், மாமனார், மாமியார் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார். தொடர்ந்து கலெக்டர் சுப்புலட்சுமி உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று உறுதி அளித்தார்.

# ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் சென்னையின் அடையாளமான விக்டோரியா மஹால் ஆகஸ்ட் 15ம் தேதி மீண்டும் திறப்பு: புதுப்பொலிவுடன் பழமை மாறாமல் புனரமைப்பு

சென்னை, ஜூலை 23
புதுப்பொலிவுடன் புனரமைக்கப்பட்ட விக்டோரியா மஹால் ஆகஸ்ட் 15ம் தேதி மீண்டும் திறக்கப்பட உள்ளதாக அதிகாரிகள்தகவல் தெரிவித்துள்ளனர். சென்னை மாநகராட்சியின் ரிப்பன் மாளிகை வளாகத்துக்கு அருகில் அமைந்துள்ள விக்டோரியா மஹால், 140 ஆண்டுகள் பழமையானது. 1882ல் சென்னையில் வசித்து வந்த முக்கிய பிரமுகர்கள் ஒன்று கூடி, மெட்ராஸ் நகரில் ஒரு டவுன் ஹால் கட்ட முடிவு செய்தனர். 1883ல் பீப்பிள்ஸ் பார்க் என்ற பகுதியில் இருந்து 3.14 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டு, விஜயநகர மாகாராஜா □பவுசபதி அனந்த கஜபதி ராஜூ இந்த கட்டிடம் கட்ட அடிக்கல் நாட்டினார். இது, இந்தோ சாரசெனிக் கட்டிடக்கலை பாணியில் கட்டப்பட்டது. இந்த கட்டிடம் ராபர்ட் சிசோமால் ரோமனெசுக் மறுமலர்ச்சி கட்டிட கலையால் வடிவமைக்கப்பட்டு, நம்பெருமாள் செட்டியாரால் 1888 முதல் தொடங்கி 1890ல் கட்டி முடிக்கப்பட்டது. 1888 ஜனவரியில் நடந்த நகர மக்கள் கூட்டத்தில், மகாராணியின் பொன்விழாவின் நினைவாக கட்டிடத்திற்கு விக்டோரியா மகாராணி பொது மண்டபம் என பெயரிடப்பட்டது.

சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ், ரூ.32.62 கோடி மதிப்பீட்டில் பழமை மாறாமல் புனரமைத்து, மறுசீரமைக்கும் பணிகள் அமைச்சர்கள் கே.என்.நேரு, உதயநிதி ஸ்டாலின் ஆகியோரால் 20.3.2023 அன்று தொடங்கி வைக்கப்பட்டு பணிகள் நடந்தது. இந்த விக்டோரியா மஹால் முழு கட்டிடத்தையும் அதன் தொன்மை மாறாமல் பழுது பார்க்கும் பணிகள், நில அதிர்வினை தாங்கும் வகையில் மறுசீரமைப்பு, முழு கூரையினையும் சீரமைப்பு, வெளிப்புறம் மற்றும் உட்புறம் மறு சீரமைப்பு, மரத்தளம் மர படிக்கட்டுகள், தரை மற்றும் முதல் தளத்தினை தற்போதைய பயன்பாட்டிற்கு ஏற்றவாறு மேம்படுத்துதல், கலைநயத்துடன் கூடிய முகப்பு விளக்குகள் அமைக்கும் பணி, இயற்கையை ரசிக்கும் வகையில் புல்தரைகள், தரைத் தளத்தில் அருங்காட்சியகம் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டது.



மேலும், முதல் தளத்தில் விஐபி நிர்வாக இடமாகவும் மற்றும் கலாச்சார இடமாகவும் பயன்படுத்தபட உள்ளது. தற்போது இதற்கான இறுதிகட்ட பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. விக்டோரியா பொதுக்கூடத்திற்கான புனரமைப்பு பணிக்கான விரிவான திட்ட அறிக்கையில் அதன் முழுமையான உறுதித்தன்மையுடன் பழமை மாறாமல் இருப்பதை உறுதி செய்ய துணை ஆணையர் தலைமையில் 10 நபர்கள் கொண்ட குழு, மியூசியத்திற்கென 12 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டு கண்காணிப்பட்டது. விக்டோரியாமஹால் முதல் தளத்தை, தற்போதைய பயன்பாட்டிற்கு ஏற்றவாறு மேம்படுத்துதல், கலைநயத்துடன் கூடிய முகப்பு விளக்குகள் அமைத்தல் ஆகிய பணிகள் முடிவடைந்துள்ளது. இந்நிலையில் விக்டோரியா மஹாலின் பழமை மாறாமல் புனரமைக்கும் பணிகள் முழுமையாக முடிவடைந்துள்ளதால் ஆகஸ்ட் மாதம் 15ம் தேதி மக்கள் பயன்பாட்டிற்காக மீண்டும் திறக்கப்பட உள்ளதாக அதிகாரிகள் தகவல் தெரிவித்துள்ளனர்.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

23.7.2025

## ஆரம்பாக்கம் சிறுமிக்கு பாலியல் தொந்தரவு குற்றவாளி பற்றி தகவல் அளித்தால் ரூ.5 லட்சம் பரிசு வழங்கப்படும்: தமிழ்நாடு காவல்துறை அறிவிப்பு






சென்னை, ஜூலை 23

திருவள்ளூர் மாவட்டம் ஆரம்பாக்கத்தில் கடந்த 12ம் தேதி 10 வயது சிறுமி அடையாளம் தெரியாத நபர் ஒருவரால் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டார். இது தொடர்பாக ஆரம்பாக்கம் காவல் நிலைய குற்ற எண் 113/2025ல் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. காவல்துறை விசாரணையின் போது, புகைப்படங்கள் மற்றும் வீடியோக்கள் மூலம் சந்தேக நபர் அடையாளம் காணப்பட்டுள்ளார். இருப்பினும், சந்தேக நபரின் பெயர் மற்றும் முகவரி தெரியவில்லை. இவ்வழக்கு விசாரணைக்கு உதவியாக சந்தேக நபரை அடையாளம் காணவும், வழக்கை துப்புதுலக்கவும் பயனுள்ளகுறிப்பிடத்தக்க மற்றும் நம்பகமான தகவலை வழங்குபவருக்கு ரூ.5 லட்சம் ரொக்க பரிசு வழங்கப்படும்.

தகவல் அளிப்பவரின் அடையாளம் ரகசியமாக வைக்கப்படும். சந்தேக நபர் தொடர்பான ஏதேனும் தகவல் அல்லது விவரம் தெரிந்தவர்கள் இதற்கென ஒதுக்கப்பட்ட திருவள்ளூர் மாவட்டம் காவல் கைபேசி எண்: 99520 60948 என்ற எண்ணில் நேரடி அழைப்பு, குறுஞ்செய்தி அல்லது வாட்ஸ் அப் மூலம் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது என காவல்துறை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## காதல் திருமணம் செய்ததால் ஆணவக்கொலை செய்ய முயற்சி:டிஜிபி அலுவலகத்தில் காதல் ஜோடி புகார்

சென்னை, ஜூலை 23

பெற்றோர் எதிர்ப்பை மீறி காதல் திருமணம் செய்த எங்களை ஆணவக்கொலை செய்ய முயற்சி செய்கிறார்கள் என்று காதல் ஜோடி ஒன்று பாதுகாப்பு கேட்டு டிஜிபி அலுவலகத்தில் புகார் மனு அளித்துள்ளனர்.

பெரம்பலூர் மாவட்டம், வாலிகண்டபுரத்தை சேர்ந்த கிருபா சென்னை காவல் துறை இயக்குநர் அலுவலகத்தில் அளித்த புகார் மனுவில் கூறியிருப்பதாவது: நான் கடந்த ஜூன் 16ம் தேதி எங்கள் ஊரை சேர்ந்த் ராஜ்கிஷோர் என்பவரை காதலித்து திருமணம் செய்து கொண்டேன். நாங்கள் இருவரும் வெவ்வேறு சமூகத்தை சேர்ந்தவர்கள் என்பதால், எங்கள் வீட்டில் எதிர்ப்பு அதிகமாக இருந்தது

. இதனால் நானும் கணவரும் விழுப்புரம் மாவட்டம் காணை காவல் நியைத்தில் பாதுகாப்பு கேட்டு ஆஜராகினோம். காவல் அதிகாரிகள் என் வீட்டாரையும் எனது கணவர் வீட்டாரையும் அழைத்து விசாரித்தார்கள். நான் மேஜர் என்பதால் என் விருப்பப்படி எனது கணவருடன் என்னை போலீசார் அனுப்பி வைத்தனர்.

அதன் பிறகு வாலிகண்டபுரத்தில் சிறுபான்மையான எனது கணவரின் தந்தை சுப்பிரமணியிடம் எனது உறவினர்கள் பாலு, ராயல் ராமசாமி ஆகியோர் அடிக்கடி போன் செய்து, 'என் பையனுக்கு எங்கள் வீட்டுல பெண்ணை தூக்குற அளவுக்கு தைரியம் வந்துருக்கா, என்னைக்கு இருந்தாலும் உன் பையன் எங்க பசங்க பைக்கை விட்டு தூக்கிடுவானுங்க' என மிரட்டுகின்றனர். எனது கணவரின் தந்தை மற்றும் தாயாரை எனது உறவினர்கள் வீடு புகுந்து அடித்து மண்டையை உடைத்துள்ளனர். இதுகுறித்து நாங்கள் பெரம்பலூர் மாவட்ட காவல் துறை அலுவலகத்தில் புகார் அளித்தும், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே, எனக்கும் எனது கணவர் மற்றும் அவரின் குடும்பத்தினருக்கும் தக்க பாதுகாப்பு அளித்தும், மேற்கூறிய குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு புகார் மனுவில் கூறப்பட்டுள்ளது.

## அதிமுக உட்கட்சி விவகாரம் தொடர்பான அனைத்து புகார் மனுக்களும் விரைந்து முடிக்கப்படும்: உயர் நீதிமன்றத்தில் தேர்தல் ஆணையம் உறுதி



சென்னை, ஜூலை 23

அதிமுக உட்கட்சி விவகாரம் தொடர்பான மனுக்கள் மீது விரைவாக விசாரித்து முடிக்கப்படும் என்று தேர்தல் ஆணையம் சென்னை உயர்நீதிமன்றத்தில் உறுதி அளித்துள்ளது. அதிமுக உட்கட்சி விவகாரம் தொடர்பாக திண்டுக்கல்லை சேர்ந்த சூரியமூர்த்தி, வழக்கறிஞர் ராம்குமார் , பெங்களூர் புகழேந்தி உள்ளிட்டோர் அளித்த புகார்கள் மீதான ஆரம்பகட்ட விசாரணையை நடத்தி முடிக்க, தேர்தல் ஆணையத்துக்கு காலவரம்பு நிர்ணயிக்கக் கோரி அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தார். அந்த மனுவில், 2026ம் ஆண்டு சட்டமன்ற தேர்தலுக்கு தயாராக வேண்டியுள்ள சூழலில், கட்சிவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் இதனை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்த வாய்ப்புள்ளதால், ஆரம்பகட்ட விசாரணையை தேர்தல் ஆணையம் தாமதப்படுத்துவதை தவிர்க்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தமனுவை விசாரித்த நீதிபதிகள் ஆர்.சுப்ரமணியன், கே.சுரேந்தர் ஆகியோர் அடங்கிய அமர்வு, அதிமுக உள்கட்சி விவகாரம் தொடர்பான புகார்கள் மீது எப்போது முடிவெடுக்கப்படும் என்று காலவரம்பை குறிப்பிட்டு எழுத்துப்பூர்வமான விளக்கத்தை தாக்கல் செய்யுமாறு தேர்தல் ஆணையத்திற்கு உத்தரவிட்டிருந்தது. அதன்படி, தேர்தல் ஆணையம் தாக்கல் செய்த பதில் மனுவில், சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின்படி ஏற்கனவே 10 பேரிடம் விசாரணை நடத்தப்பட்டு எழுத்துப்பூர்வமான மனுக்கள் பெறப்பட்டுள்ளது.

இயற்கை நீதியின் அடிப்படையில் மனுதாரர்களுக்கு போதுமான கால அவகாசம் வழங்கப்பட வேண்டும். ஆரம்பகட்ட விசாரணை முடிக்கப்பட்ட பின்பு, இந்த பிரச்சனை குறித்து உரிய முடிவெடுக்கப்படும். பீகார் தேர்தல் தொடர்பாக தேர்தல் ஆணையத்துக்கு வேலை பளு அதிகமாக உள்ளது. அரசியல் சாசன அமைப்பான தேர்தல் ஆணையத்துக்கு, விசாரணை தொடர்பாக கால வரம்பு நிர்ணயிக்க தேவையில்லை. உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுப்படி விரைவாக விசாரித்து முடிக்கப்படும் என்று கூறப்பட்டிருந்தது. இந்த வழக்கின் விசாரணை இன்றும் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

## இன்றைய ராசி பலன்கள் (23.7.2025)

**மேஷம்:** திட்டமிட்டபணிகள் வெற்றிகரமாக நிறைவேறும். வீண் செலவுகள் குறையும். பரிகாரம்: செவ்வாயிற்கு அர்ச்சனை செய்யவும்.

**ரிஷபம்:** குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை. வருமானத்தில் உயர்வு ஏற்படும். பரிகாரம்: தாயாரை தரிசனம் செய்யுங்கள்.

**மிதுனம்:** புதிய பொறுப்புகள் கிடைக்கும். சில்லறை சண்டைகளை தவிர்க்க வேண்டும். பரிகாரம்: விநாயகர் பூஜை செய்யுங்கள்.

**கடகம்:** மனதில் இருந்த கவலைகள் நீங்கும். உறவினர்கள் ஆதரவு அதிகரிக்கும். பரிகாரம்: தண்ணீர் புனித மாக பரிசுத்த இடத்தில் ஊற்றுங்கள்.

**சிம்மம்:** தொழிலில் புதிய வாய்ப்புகள். சிறு இடையூறுகள் வந்தாலும் நீங்கும். பரிகாரம்: சூரியனுக்கு ஜபம் செய்யவும்.

**கன்னி:** பயணங்கள் சாதகமாக அமையும். வழக்கு சம்பந்தமான விஷயங்களில் முன்னேற்றம். பரிகாரம்: நவகிரஹ பூஜை செய்து வாருங்கள்.

**துலாம்:** பழைய கடன்கள் திரும்ப கிடைக்கும். குடும்பத்தில் நிம்மதி ஏற்படும். பரிகாரம்: சந்திரனுக்கு பால் அபிஷேகம் செய்யவும்.

**விருச்சிகம்:** வியாபாரத்தில் லாபம். உற்சாகமான நாள். நண்பர்களின் ஆதரவு கிடைக்கும். பரிகாரம்: சனி பகவானை வணங்கவும்.

**தனுசு:** புதிய முயற்சிகள் வெற்றி பெறும். பண வரவு இருக்கும். பரிகாரம்: துர்கை அம்மனை வழிபடுங்கள்.

**மகரம்:** வீட்டில் நற்செய்தி. மனச்சாந்தி ஏற்படும். கொடுத்த உதவிக்கு மதிப்பு கிடைக்கும். பரிகாரம்: நந்தி தேவனை வழிபடுங்கள்.

**கும்பம்:** தொழில் வளர்ச்சி, ஆனந்த நாள். நண்பர்களின் துணை கிடைக்கும். பரிகாரம்: துளசி அருகே விளக்கு ஏற்றுங்கள்.

**மீனம்:** கடின உழைப்பால் வெற்றி. ஆரோக்கியம் மேம்படும். பரிகாரம்: குருவுக்கு பூஜை செய்யவும்.

## கோயில் நிதியில் கிறிஸ்தவ தேவாலய பணியாளர்கள் நலவாரியமா?: தமிழ்நாடு அரசின் உண்மை சரிபார்ப்பு பிரிவு விளக்கம்

சென்னை, ஜூலை 23

கோயில் நிதியில் கிறிஸ்தவ தேவாலய பணியாளர்கள் நலவாரியம் செயல்படுவதாக பரவும் வதந்திக்கு தமிழ்நாடு அரசின் உண்மை சரிபார்ப்பு பிரிவு விளக்கம் அளித்துள்ளது. கிறிஸ்தவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நலவாரியம் இந்து கோயில்களின் நிதியில் செயல்படுவதாகவும், இந்துக்களின் வரிப்பணம் இதற்காக செலவிடுவதாகவும் சமூக வலைதளங்களில் வேகமாக பரப்பப்பட்டு வருகிறது.

இதற்கு தமிழ்நாடு அரசின் உண்மை சரிபார்ப்பு பிரிவு பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது. இதுகுறித்து தமிழ்நாடு அரசின் உண்மை சரிபார்ப்பு பிரிவு கூறியிருப்பதாவது: இது முற்றிலும் பொய்யான தகவல். இந்து சமய அறநிலையத்துறை சட்டத்தின் கீழ் கோயில்களின் நிதியை வேறு துறைக்கு செலவிட முடியாது.

கிறிஸ்துமஸ் பண்டிகை காலத்தில் வழக்கமாக உபதேசியர்கள் மற்றும் பணியாளர்கள் நலவாரியம் என்பது சிறுபான்மை நலத்துறையின் கீழ் வருவதால், அந்த துறைக்காக ஒதுக்கப்படும் நிதியின் மூலமாகவே நலவாரியம் இயங்கி வருகிறது. இதேபோல், கிராம கோயில் பூசாரி நலவாரியம், இஸ்லாமியர்களுக்கான உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நலவாரியம் போன்றவை அந்தந்த பிரிவுகளுக்கு ஒதுக்கப்பட்ட வருகின்றன. எனவே தேவையற்ற வதந்திகளை பரப்பாதீர்கள். பொதுமக்களும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பவன் கல்யாண் படத்திற்கு டிக்கெட் விலை உயர்வு



பவர் ஸ்டார் பவன் கல்யாண் அரசியல்வாதியும், தெலுங்கு சினிமாவின் முன்னணி நடிகரும் ஆவார். இவர் தற்போது ஹரி ஹர வீர மல்லு என்ற படத்தில் நடித்து முடித்துள்ளார். கிரிஷ் மற்றும் ஜோதி கிருஷ்ணா இயக்கி உள்ள இந்த படத்திற்கு கீரவாணி இசை அமைத்திருக்கிறார். இப்படத்தில் நாயகியாக நிதி அகர்வால் நடித்துள்ளார்.

இப்படம் வருகிற ஜூலை 24ந் தேதி நாளை மறுநாள் தமிழ், தெலுங்கு, இந்தி, மலையாளம் மற்றும் கன்னட மொழியில் ஒரு பான் இந்தியா படமாக வெளியாக உள்ளது. இந்த படத்தின் மீது ரசிகர்கள் அதிக எதிர்பார்ப்பினை வைத்துள்ளனர்.

இந்தநிலையில், `ஹரிஹரவீரமல்லு' படத்தின் ரிலீஸையொட்டி, டிக்கெட் விலையை உயர்த்தப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. அதாவது ஜூலை 23ம் தேதி இரவு 9 மணிக்கு திரையிடப்படும் சிறப்பு காட்சிக்கு 600 ரூபாய்க்கு டிக்கெட் விற்பனை செய்ய அனுமதி வழங்கி தெலுங்கானா அரசு உத்தரவிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

## ரூ.4,600 கோடி சொத்து.. இந்தியாவின் பணக்கார நடிகை யார் தெரியுமா?



சினிமா துறையைப் பொறுத்தவரை, நடிகர்நடிகைகளுக்கு பெயரும், புகழும் மட்டுமின்றி கோடிக்கணக்கில் பணமும் சம்பளமாகக் கிடைக்கிறது. இப்போது எல்லாம் ஒரு சில படங்கள் வெற்றி பெற்றாலே, நடிகர்நடிகைகள் தங்கள் சம்பளத்தை 8 இலக்கங்களில் உயர்த்தி விடுகின்றனர். மிகச் சாதாரண பின்னணியில் இருந்து வந்தவர்கள் கூட பல ஆயிரம் கோடி சொத்து மதிப்புடன், தனி விமானம், சொகுசு கார்கள் என வலம் வருவதைப் பார்க்க முடிகிறது.

நடிகர்நடிகைகளின் திறமைக்கு கிடைக்கும் ஊதியமாக இருந்தாலும், பிற துறைகளை விட அதிக பணம் கொட்டும் துறையாக சினிமா உள்ளது என்றால் மிகையல்ல. இந்தியாவின் பணக்கார நடிகராக ஷாருக்கான் உள்ளார் என்பது அனைவருக்கும் தெரிந்த விஷயமே. அதே நேரத்தில், இந்தியாவில் பணக்கார நடிகை என்றால் உடனே உங்கள் நினைவுக்கு ஐஸ்வர்யாராய், கத்ரீனா கைப், தீபிகா படுகோனே ஆகியோரின் பெயர்கள் வரலாம்.

ஆனால், இந்தப் பட்டியலில் முதலிடத்தில் இருப்பவர் கடந்த 13 ஆண்டுகளாக வெற்றிப் படமே கொடுக்காத ஒரு நடிகை. அவர் வேறு யாருமல்ல, இந்தியில் பிரபல நடிகையாக இருக்கும் ஜூஹி சாவ்லா தான். இவருக்கு ரூ.4,600 கோடிக்கும் அதிகமான சொத்து உள்ளது. ஹுருன் செல்வந்தர்கள் பட்டியல் 2024 இதை உறுதி செய்துள்ளது.

1984 ஆம் ஆண்டு மிஸ் இந்தியா பட்டம் வென்ற ஜூஹி சாவ்லா, அடுத்த சில ஆண்டுகளிலேயே பாலிவுட்டில் நாயகியாக அறிமுகமானார். தொடர்ந்து, ஷாருக்கான் உள்ளிட்ட உச்ச நட்சத்திரங்களுடன் பல படங்களில் முன்னணி நடிகையாக நடித்தவர், 2010 ஆம் ஆண்டிற்குப் பிறகு குணச்சித்திர கதாபாத்திரங்களில் நடிக்கத் தொடங்கிவிட்டார். கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக வெற்றிப் படம் எதுவும் இல்லையென்றாலும், அவர் பணக்கார நடிகையாக இருப்பதற்கு, பல்வேறு தொழில்களில் முதலீடு செய்து அதன் மூலம் பல கோடி வருமானம் ஈட்டுவதே காரணம் என்று கூறப்படுகிறது.

தனது நெருங்கிய நண்பரான நடிகர் ஷாருக்கானின் ரெட் சில்லீஸ் தயாரிப்பு நிறுவனத்தின் இணைப் பங்குதாரராகவும், ரூ.9,150 கோடி மதிப்புள்ள கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியில் ரூ.620 கோடி வரை முதலீடு செய்துள்ளாராம். இப்படி பல்வேறு தொழில்களில் செய்துள்ள முதலீடு மற்றும் அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தினால் ஜூஹி சாவ்லா பணக்கார நடிகையாக வலம் வருகிறார்.

## ஒடிடியில் வெளியாகும் "மார்கன்".. எதில், எப்போது பார்க்கலாம்?




விஜய் ஆண்டனி ஆரம்பத்தில் இசையமைப்பாளராக திரைத்துறையில் நுழைந்தவர். பின்னர் நடிப்பதிலும் ஆர்வம் கொண்டு "சலீம், இந்தியா பாகிஸ்தான், பிச்சைக்காரன்" உள்ளிட்ட படங்களின் மூலம் ரசிகர்கள் மத்தியில் பிரபலமடைந்தார். இவர் தற்போது 'அட்டக்கத்தி, பீட்சா, சூது கவ்வும், இன்று நேற்று நாளை, மாயவன்' உள்ளிட்ட படங்களில் எடிட்டராக பணிபுரிந்த லியோ ஜான் பால் இயக்கத்தில் 'மார்கன்' படத்தில் நடித்துள்ளார்.

மார்கன்' படம் கிரைம் திரில்லர் கதைக்களத்தில் உருவாகியுள்ளது. இப்படம் கடந்த மாதம் 27ம் தேதி திரையரங்குகளில் வெளியானது. இதில் விஜய் ஆண்டனியுடன் இணைந்து அஜய், சமுத்திரக்கனி, பிரகிடா, தீப்ஷிகா என பலரும் நடித்துள்ளனர். உலகளவில் ரசிகர்கள் மத்தியில் இப்படம் நல்ல வரவேற்பை பெற்றது.

இந்த நிலையில், மார்கன் படம் ஓடிடி தளத்தில் வெளியாக உள்ளது. அதாவது, மார்கன் படம் டெண்ட்கொட்டா ஓடிடி தளத்தில் வருகிற 25ந் தேதி வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## வாஷிங்டன் ஓபன் டென்னிஸ்: லியார்னர் டீன் 2வது சுற்றுக்கு முன்னேற்றம்

பல முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ள வாஷிங்டன் ஓபன் டென்னிஸ் தொடர் அமெரிக்காவில் நடைபெற்று வருகிறது. இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் இன்று நடைபெற்ற முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் அமரிக்காவின் லியார்னர் டீன், சக நாட்டவரான எமிலியோ நவா உடன் மோதினார்.

இந்த போட்டியில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய லியார்னர் டீன் 61, 64 என்ற நேர் செட் கணக்கில் அமிலியோ நவாவை வீழ்த்தி 2வது சுற்றுக்கு முன்னேறினார்.

## 4வது டெஸ்ட்: இந்திய அணியின் பிளேயிங் லெவனை தேர்வு செய்த ஆகாஷ் சோப்ரா.. யாருக்கெல்லாம் இடம்..?



இங்கிலாந்துக்கு சென்றுள்ள இந்திய கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றுள்ளது. இதில் முதலாவது மற்றும் 3வது டெஸ்டில் இங்கிலாந்தும், 2வது டெஸ்டில் இந்தியாவும் வெற்றி பெற்றன. தொடரில் இந்தியா 12 என்ற கணக்கில் பின்தங்கியுள்ளது. இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 4வது டெஸ்ட போட்டி மான்செஸ்டரில் உள்ள ஓல்டு டிராப்போர்டில் நாளை தொடங்குகிறது. இதனையொட்டி இந்திய அணியின் தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த போட்டிக்கான இந்திய அணியின் பிளேயிங் லெவனில் யாரெல்லாம் இடம் பெற போகிறார்கள்? என்ற கேள்வி பலரிடையே எழுந்துள்ளது. ஏனெனில் இந்திய அணியில் ரிஷப் பண்ட் உள்ளிட்ட சில வீரர்கள் காயமடைந்துள்ளதாக கூறப்படுகிறது. இதன் காரணமாக இந்திய அணியில் மாற்றங்கள் இருக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் இந்த போட்டிக்கான இந்திய அணியின் பிளேயிங் லெவனை முன்னாள் வீரர் ஆகாஷ் சோப்ரா தேர்வு செய்துள்ளார். அந்த அணியில் விக்கெட் கீப்பர்களான ரிஷப் பண்ட், துருவ் ஜூரல் இருவரையும் தேர்வு செய்துள்ளார். ஆனால் தமிழக வீரர் சாய் சுதர்சன் மற்றும் சுழற்பந்து வீச்சாளரான குல்தீப் யாதவை அவர் தேர்வு செய்யவில்லை.

ஆகாஷ் சோப்ரா தேர்வு செய்த பிளேயிங் லெவன் பின்வருமாறு:

யஷஸ்வி ஜெய்ஸ்வால், கேஎல் ராகுல், கருண் நாயர், சுப்மன் கில், ரிஷப் பண்ட், துருவ் ஜூரல், ரவீந்திர ஜடேஜா, வாஷிங்டன் சுந்தர், ஜஸ்பிரித் பும்ரா, முகமது சிராஜ், அன்ஷுல் கம்போஜ் அல்லது ஆகாஷ் தீப்

## பந்துவீச்சில் என்னுடைய ரோல் மாடல் அவர்தான் அன்ஷுல் கம்போஜ்



இந்தியகிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆடி வருகிறது. இதில் 3 போட்டிகள் நிறைவடைந்துள்ள நிலையில் 21 என்ற கணக்கில் இங்கிலாந்து முன்னிலையில் உள்ளது. இந்நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான 4வது டெஸ்ட் போட்டி நாளை தொடங்குகிறது.

இந்த நான்காவது டெஸ்ட் போட்டிக்கு முன்னதாக இந்திய அணியின் முக்கிய வீரர்களான ஆகாஷ் தீப், அர்ஷ்தீப் சிங், நிதிஷ்குமார் ரெட்டி ஆகியோர் காயமடைந்துள்ளனர். இதன் காரணமாக மாற்றுவீரராக சி.எஸ்.கே அணியில் விளையாடிய வேகப்பந்து வீச்சாளரான அன்ஷுல் கம்போஜ் இந்திய டெஸ்ட் அணியில் இணைக்கப்பட்டுள்ளார்.

அண்மையில் இந்திய ஏ அணியுடன் இங்கிலாந்து நாட்டிற்கு சென்று சிறப்பான செயல்பாட்டை வெளிப்படுத்திய அவருக்கு இந்த வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தது. இந்நிலையில் இந்திய அணியுடன் முதல் முறையாக இணைந்ததை அடுத்து தனது கிரிக்கெட் பயணம் குறித்து சில கருத்துக்களை அன்ஷுல் கம்போஜ் பகிர்ந்து கொண்டார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது, நான் 12 வயதிலிருந்து தொழில்முறை கிரிக்கெட்டை விளையாடி வருகிறேன். என்னுடைய வளர்ச்சியில் என்னுடைய தந்தையின் பங்கும், ஆதரவும் அதிகம். ஒவ்வொரு நாளும் வீட்டில் இருந்து 2 மணி நேரம் பயணம் செய்து தான் கிரிக்கெட் விளையாடுவேன்.

என்னுடைய பந்துவீச்சில் நான் கிளென் மெக்ராத்தை இன்ஸ்பிரேஷனாக கொண்டுள்ளேன். அவரைப் போன்று நிலையான பந்துவீச்சும், விக்கெட்டெடுக்கும் திறனையும் வளர்த்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். அவர்தான் என்னுடைய கிரிக்கெட்டின் இன்ஸ்பிரேஷன். இவ்வாறு அவர் கூறினார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.